# காசநோயைத் தடுத்து நிறுத்தவும்

## காசநோய் சிகிச்சை மூலம் குணப்படுத்தி தடுக்கக்கூடிய நோய்!

ஒரு காசநோயாளி இருமும்பொழுது அல்லது தும்மும்பொழுது அவருடைய நோய்க் கிருமிகள் வெளியேறுவதால் அந்நோய் பரவுகிறது. காசநோய் எவரையும் பீடிக்க வல்லது.



நீங்கள் காசநோய்க் கிருமிகளைச் சுவாசித்தால், அக்கிருமிகள் உங்கள் சுவாசப்பையைச் சென்றடையும். சிலவேளைகளில் அக்கிருமிகள் உங்கள் உடலின் பிற அங்கங்களையும் சென்றடையும்.

## காசநோய் தொற்று

நீங்கள் உடல்வலு கொண்டவரானால், உங்கள் உடலில் காசநோய்க் கிருமிகள் வளர்வதைத் **தடுக்க முடியும்.**

உங்கள் உடலில் காசநோய்க் கிருமிகள் உள்ளன. ஆனால் அவை வளரவோ உங்களை நோய்வாய்ப் படுத்தவோ இல்லை. இது **காசநோய்த் தொற்று** எனப்படும்.

- உங்களிடமிருந்து மற்றவர்களுக்கு காசநோய் பரவ முடியாது.
- நீங்கள் **நோய்வாய்ப்பட மாட்டீர்கள்.**
- தோல்-பரிசோதனை மூலம் உங்களை நோய் தொற்றியமை தென்படலாம்.
- உங்கள் நெஞ்சுக் கதிர்ப்படம் இயல்பானதாய் அமையலாம்.



உங்கள் உடலில் காசநோய்க் கிருமிகள் வளராவாறு, உங்களைக் காசநோய்க்கு உள்ளாக்காவாறு நீங்கள் மருந்து உட்

## காசநோய்

நீங்கள் உடல்வலு அற்றவரானால், உங்கள் உடலில் காசநோய்க் கிருமிகள் வளர்வதைத் **தடுக்க முடியாது.** வேறொரு நோயினால் அல்லது மனச்சுமையினால் அல்லது வெறும் மூப்பினால் உங்கள் உடல்வலு குன்றலாம்.

கிருமிகள் தொடர்ந்து வளர்ந்து உங்களை நோய்வாய்ப்படுத்தும். இது **காசநோய்** எனப்படும்.



ஊங்களிடமிருந்து மற்றவர்களுக்கு காசநோய் **பரவ முடியும்.** நீங்கள் பின்வருவனவற்றுக்கு **உள்ளாக முடியும்:**

- காய்ச்சல்
- இருமல் (3 கிழமைகளுக்கு மேற்பட)
- களைப்பு
- எடை குறைவு
- இரவில் வியர்த்தல்
- நெஞ்சு நோ

நீங்கள் காசநோயைக் குணப்படுத்த **மருந்து உட்கொள்ள வேண்டும்.** நீங்கள் எவ்வளவு காலம் மருந்து உட்கொள்ள வேண்டும் என்பதை உங்கள் மருத்துவர் தீர்மானிப்பார். காசநோய் மருந்து இலவசம்!



**காசநோயைத் தடுத்து நிறுத்துவதற்கு இதுவே தருணம்!**

416.338.7600 toronto.ca/health | TORONTO Public Health

PH0903GB083 (Tamil) April 2009